பதவிகள் - வெற்றிடம்

கிராமிய அபிவிருத்தி, சமூகப் பாதுகாப்பு மற்றும் சமூக வலுவூட்டுகை அமைச்சு

சமூக சேவைகள் திணைக்களம்

வாழ்க்கைத் தொழிற் கல்வி போதனாசிரியர் (தரம் III)

சமூக சேவைகள் திணைக்களத்தின் கீழ் முன்னெடுக்கப்பட்டுவரும் வாழ்க்கைத் தொழிற் பயிற்சி நிலையங்களில் வாழ்க்கைத் தொழிற் கல்வி போதனாசிரியர் 15 பதவி வெற்றிடங்களுக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கு இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. பின்வருமாறு காட்டப்பட்டுள்ள விண்ணப்பப் படிவத்திற்கமைவாகத் தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்களினை "பணிப்பாளர், சமூக சேவைகள் திணைக்களம், 02 ஆவது மாடி, கட்டம் II, செத்சிறிபாய, பத்தரமுல்ல" என்ற முகவரிக்கு 2026.11.30 ஆந் திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு அஞ்சல் மூலம் அல்லது நேரில்கொண்டு வந்து ஒப்படைத்தல் வேண்டும். விண்ணப்பத்தினை வைத்து அனுப்பும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில், "வாழ்க்கைத் தொழிற் கல்வி போதனாசிரியர் பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்தல்" எனக் குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும். www.socialservices.gov.lk என்ற இணையத்தளத்தினூடாக மாதிரிப் படிவம் மற்றும் விபரங்களினைப் பெற்றுக் கொள்ள முடியும்.

இப் பதவிக்கு விண்ணப்பிப்பதற்கு எதிர்பார்த்திருக்கும் உத்தியோகத்தர்கள் பின்வரும் தகைமைகளினைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

1. பதவி வெற்றிடம் நிலவும் நிறுவனங்கள் - 15

தொடர் இலக்கம்	*வாழ்க்கைத் தொழிற் கல்வி போதனாசிரியர் பதவி*	*வாழ்க்கைத் தொழிற் பயிற்சி நிறுவனம்*	*பதவிகளின் எண்ணிக்கை*
01	குழாய் பழுதுபார்ப்பவர் (Plumber)	அமுணுகும்புர வாழ்க்கைத் தொழிற் பயிற்சி நிறுவனம்	03
		கெட்டவல வாழ்க்கைத் தொழிற் பயிற்சி நிறுவனம்	
		சீதுவ வாழ்க்கைத் தொழிற் பயிற்சி நிறுவனம்	
02	செயற்கை அலங்கார ஆபரணக் கலைஞர்	தெளம்புயாய வாழ்க்கைத் தொழிற் பயிற்சி நிறுவனம்	03
		மட்டக்களப்பு வாழ்க்கைத் தொழிற் பயிற்சி நிறுவனம்	
		களவான வாழ்க்கைத் தொழிற் பயிற்சி நிறுவனம்	
03	தொழிற்சாலை தையல் எந்திர இயக்குநர்	தெளம்புயாய வாழ்க்கைத் தொழிற் பயிற்சி நிறுவனம்	02
		அமுணுகும்புர வாழ்க்கைத் தொழிற் பயிற்சி நிறுவனம்	
04	தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில் நுட்பம்	மாதம்பே வாழ்க்கைத தொழிற் பயிற்சி நிறுவனம்	02
		கிளிநொச்சி வாழ்க்கைத் தொழிற் பயிற்சி நிறுவனம்	
05	விற்பனை உதவியாளர்	தெளம்புயாய வாழ்க்கைத் தொழிற் பயிற்சி நிறுவனம்	01

Gazette.lk SINCE 2014 AMBITIONS REALIZED

தொடர் இலக்கம்	*வாழ்க்கைத் தொழிற் கல்வி போதனாசிரியர் பதவி*	*வாழ்க்கைத் தொழிற் பயிற்சி நிறுவனம்*	*பதவிகளின் எண்ணிக்கை*
06	ரெய்லர்	கிளிநொச்சி வாழ்க்கைத் தொழிற் பயிற்சி நிறுவனம்	01
07	கடதாசி மீள்சுழற்சி தொழில்நுட்ப வல்லுனர்	மட்டக்களப்பு வாழ்க்கைத் தொழிற் பயிற்சி நிறுவனம்	01
08	அழகுக் கலை நிபுணர்	வத்தேகம வாழ்க்கைத் தொழிற் பயிற்சி நிறுவனம்	01
09	வெதுப்பக வல்லுனர் (பேஸ்ட்ரி மற்றும் பேக்கரி)	தெளம்புயாய வாழ்க்கைத் தொழிற் பயிற்சி நிறுவனம்	01
மொத்தப் பதவி வெற்றிடங்களின் எண்ணிக்கை			15

1.1 **திறந்த ஆட்சேர்ப்பு**

1.1.1 **வயது வரையறை** :

விண்ணப்பங்களினை ஏற்றுக்கொள்ளும் தினத்தன்று 18 வயதிற்குக் குறையாதவராகவும் 35 வயதிற்கு மேற்படாத வராகவும் இருத்தல் வேண்டும்.

1.1.2 **கல்வித் தகைமைகள்** :

(அ) வாழ்க்கைத் தொழிற் கல்விப் போதனாசியர் (உணவுத் தொழில்நுட்பம்/வெதுப்பக மற்றும் பேக்கரி தயாரிப்பு) பதவிகள் தொடர்பில் சிங்களம் அல்லது தமிழ் அல்லது ஆங்கில மொழி, கணிதம் மற்றும் மேலும் இரண்டு (02) பாடங்களில் திறமைச் சித்தியுடன் (சீ) ஒரே அமர்வில் (06) பாடங்களில் க.பொ.த. (சா.தர) பரீட்சையில் சித்திபெற்றிருத்தல்.

(இ) வாழ்க்கைத் தொழிற் கல்வி போதனாசியர் (உணவுத் தொழில்நுட்பம்/வெதுப்பக மற்றும் பேஸ்ட்ரி தயாரிப்பு) பதவிகளினைத் தவிர்த்து, பிற பதவிகளுக்கான கல்வித் தகைமைகள்.

i. சிங்களம்/தமிழ் மொழி, கணிதம் மற்றும் மேலும் இரண்டு பாடங்களில் திறமைச் சித்தியுடன் ஒரே அமர்வில் (06) பாடங்களில் கல்விப் பொது தராதர (சா.தர) பரீட்சையில் சித்திபெற்றிருத்தல்.

மற்றும்

ii. கல்வி பொது தராதர (உ./தர) பரீட்சையில் வேண்டிய பாடவிதானமொன்றில் சகல பாடங்களிலும் (சாதாரணப் பொதுப் பரீட்சையினைத் தவிர்த்து) சித்திபெற்று மூன்றாம் நிலைக் கல்வியினைத் தொடர்வதற்குத் தேவையான அடைவு மட்டத்தினைப் பெற்றிருத்தல்.

1.1.3 **தொழிற் கல்வித் தகைமைகள் :-**

தொடர்புடைய தொழில் துறையில் இலங்கை தொழில்நுட்பக் கல்லூரி அல்லது ஜேர்மன் தொழில்நுட்ப பயிற்சி நிறுவனத்தில் இரு ஆண்டுகள் அல்லது அதனிலும் கூடிய கால அளவிலான பாடநெறிக்கான சான்றிதழொன்றினைப் பெற்றிருத்தல்.

அல்லது

சிறுகைத்தொழில் திணைக்களத்தில் அல்லது புடைவைக் கைத்தொழில் திணைக்களத்தில் இரு ஆண்டுகள் அல்லது அதனிலும் கூடிய கால அளவிலான பாடநெறிக்கான சான்றிதழொன்றினைப் பெற்றிருத்தல்.

அல்லது

சமூக சேவைகள் திணைக்களம் அல்லது தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் அல்லது அவற்றுடன் இணைந்த நிறுவனமொன்றிலிருந்து பெறப்பட்ட உரிய தொழிற் கல்வி தொடர்பில் இரு ஆண்டுகள் அல்லது அதனிலும் கூடிய கால அளவிலான பாடநெறிக்கான சான்றிதழொன்றினைப் பெற்றிருத்தல்.

Gazette.lk AMBITIONS REALIZED SINCE 2014

அல்லது

வாழ்க்கைத் தொழிற் பயிற்சி அதிகார சபை அல்லது அவற்றுடன் இணைந்த நிறுவனமொன்றிலிருந்து பெறப்பட்ட உரிய தொழிற் கல்வி தொடர்பில் இரு ஆண்டுகள் அல்லது அதனிலும் கூடிய கால அளவிலான பாடநெறிக்கான சான்றிதழொன்றினைப் பெற்றிருத்தல்.

மூன்றாம் நிலை மற்றும் தொழிற் கல்வி ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்படும் தேசிய தொழிற் திறன் (NVQ) மற்றும் (05) ஆவது மட்டத்திற்கு உள்ளடக்கப்பட்ட உரிய தொழில்நுட்பப் பாடநெறி அல்லது அதற்குச் சமமான மூன்றாம் நிலை மற்றும் தொழிற் கல்வி ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்படும் பாடநெறியொன்றினை வெற்றிகரமாகத் தொடர்ந்து சான்றிதழொன்றினைப் பெற்றிருத்தல்.

1.1.4. **அனுபவம்** :

தொடர்பற்றது.

SINCE 2014 Gazette.lk AMBITIONS REALIZED

1.1.5. **உடற் தகுதிகள் :**

ஒவ்வொரு விண்ணப்பதாரரும் இலங்கையின் வேண்டிய எப்பாகத்திலும் பணியாற்றுவதற்கும், பதவியின் கடமைகளினை நிறைவேற்றுவதற்கும் போதிய உடலாரோக்கியத்தினைக் கொண்டவராக இருத்தல் வேண்டும்.

1.1.6 **பிற** :

i. இலங்கைப் பிரசையாக இருத்தல்.

ii. விண்ணப்பதாரர் சிறந்த நன்னடத்தையினைக் கொண்டவராக இருத்தல்.

iii. பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்குத் தேவையான சகல தகைமைகளினையும், விண்ணப்பங்கள் கோரப்படும் அறிவித்தலில்/வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட தினத்தன்று எவ்வகையிலும் பூர்த்தி செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

1.1.7 **ஆட்சேர்ப்பு முறைமை :**

எழுத்து மூல மற்றும் வாழ்க்கை முறைப் பரீட்சை பெறுபேற்றின் அடிப்படையில் ஆட்சேர்ப்பு இடம்பெறும்.

1.1.7.1 **எழுத்து மூலப் பரீட்சை** :

விடயங்கள்	*நேரம்*	*ஆகக்கூடிய மதிப்பெண்கள்*	*தேர்ச்சி மதிப்பெண்கள்*
நுண்ணறிவுப் பரீட்சை	நேரம் 01 மணி	100	40
கிரகித்தல்	நேரம் 01 மணி	100	40

1.1.7.2 **தொழில்முறைப் பரீட்சை** :

வாழ்க்கைத் தொழில் போதனாசிரியர்களின் நடைமுறை அறிவினைப் பரிசோதித்தல்.

விடயங்கள்	*ஆகக்கூடிய மதிப்பெண்கள்*	*தேர்ச்சி மதிப்பெண்கள்*
01. பாடத்திற்கு முன்னதாக வகுப்பறையினைத் தயார் செய்தல்.	25	40%
02. பாட அறிமுகம்	25	
03. போதனாசிரியரின் விடயம் தொடர்பிலான அறிவு	25	
04. பயிலுனர்களின் கவனத்தினை ஈர்ப்பதற்குப் பயன் படுத்தப்படும் நுட்பங்களின் செயற்றிறன்.	25	
மொத்தம்	100%	

SINCE 2014 Gazette.lk AMBITIONS REALIZED

1.1.8 **பொது நேர்முகப் பரீட்சை :**

பதவிக்குப் பரிந்துரைக்கப்பட்ட தகைமைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதா என்பதைப் பரீட்சிப்பதற்காகச் சான்றிதழ்களினைப் பரீட்சித்தல். (மதிப்பெண்கள் வழங்கப்பட மாட்டாது.)

1.1.9 **சம்பள அளவுத் திட்டம் :**

பொ.நி.சு. 10/2025 இன் பிரகாரம் MT-01 -2025

சம்பள அளவு ரூ. 50,090.00 - 10 x 540 - 11 x 630 - 10 x 1,010 - 10 x 1,190 ரூபா 84,420.00 ஆகும்.

(இச் சம்பள அளவு 2027.01.01 ஆந் திகதியிலிருந்து அமுலுக்கு வரும்.)

1.1.10 **குறிப்பு :**

எழுத்து மூல மற்றும் வாழ்க்கைத் தொழில் முறைப் பரீட்சையினூடாக ஆட்சேர்ப்புச் செய்யப்படுவர். எழுத்து மூலப் பரீட்சையில் தேர்ச்சி பெற்ற விண்ணப்பதாரர்களிலிருந்து இரு மடங்களினர் வாழ்க்கைத் தொழில் முறைப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர் என்பதுடன், அத்தருணத்தில் பொது நேர்முகப் பரீட்சை நடாத்தப்படும். பொது நேர்முகப் பரீட்சையில் தகைமைகளினைப் பூர்த்தி செய்யும் விண்ணப்பதாரர்களினுள் எழுத்து மூல மற்றும் வாழ்க்கைத் தொழில் முறைப் பரீட்சை இரண்டிலும் பெற்ற மொத்த மதிப்பெண்களின் கூட்டுத்தொகையின் திறன் ஒழுங்கு முறையின் பிரகாரம் நிலவும் வெற்றிடங்களின் எண்ணிக்கைக்கு ஆட்சேர்ப்புச் செய்யப்படுவர்.

1.1.11 **சேவை நிபந்தனைகள் :**

இப் பதவி நிரந்தரமானது, ஓய்வூதியத்தினைக் கொண்டது. ஓய்வூதியத் திட்டம் தொடர்பில் அரசினால் எதிர்வரும் காலங்களில் எடுக்கப்படும் கொள்கைசார் தீர்மானத்திற்கு அமைவாக இருத்தல் வேண்டும் என்பதுடன், விதவைகள் மற்றும் அநாதைகள் ஓய்வூதியப் பங்களிப்பு நிதியினைச் செலுத்துதல் வேண்டும். பொ.நி.சு. 18/2020 மற்றும் அவற்றுடன் தொடர்பிலான சுற்றுநிரூபங்களின் பிரகாரம், மூன்று வருடங்களினுள் வேண்டப்பட்ட அரச கருமமொழித் தேர்ச்சியினைப் பெற்றிருத்தல் வேண்டும்.

1.1.12 **குறிப்பு**

மேற்குறிப்பிட்ட தகைமைகளினைப் பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரர்கள் மாத்திரமே விண்ணப்பித்தல் வேண்டும் என்பதுடன், தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரர்கள் உரிய வெற்றிடங்களினைக் கொண்ட நிறுவனத்தில் ஐந்து வருடங்கள் கட்டாயமாகச் சேவையாற்றுதல் வேண்டும்.

தர்சனீ கருணாரத்ன,
சமூக சேவைகள் பணிப்பாளர்.

சமூக சேவைகள் திணைக்களம்,
2 ஆவது மாடி,
II ஆவது கட்டம்,
செத்சிறிபாய,
பத்தரமுல்ல.
2026.10.26

SINCE 2014 Gazette.lk AMBITIONS REALIZED